**ADM COURT, SANKARANKOVIL**

**தேதி 08.07.2025**

**அசல் வழக்கு எண். 79/2019**

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். வழக்குரை விபரங்களை எனது வழக்கறிஞருக்கு நான்தான் சொன்னேன் என்றால் சரிதான். வழக்குரையில் 2 தபசில் சொத்துக்களை காண்பித்துள்ளேன். 2 தபசில் சொத்துக்களும் சர்வே எண்.376/2 ல் உள்ளது. மேற்படி 2 தபசில்சொத்துக்களிலும் கீழ்பாதி இடம் எனக்கு பாத்தியப்பட்டது என்று இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தபசில் சொத்துக்கள் எப்போது கிரையம் பெறப்பட்டது என்றால் 1974ம் வருடம் எனது தந்தையால் எனது பெயரில் கிரையம் வாங்கப்பட்டது. மேற்படி 1974ம் வருட கிரையப்பத்திரத்தின் அசலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கான காரணம் என்னவென்றால் மேற்படி கிரையப்பத்திரத்தின் அசல் தற்போது எங்குள்ளது என்று எனக்கு தெரியாது. அதனால் அதன் சார்பதிவக நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிரையப்பத்திரத்தின் அசலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கான காரணத்தை எனது வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மேற்படி கிரையப்பத்திரத்தின் அசலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கான காரணத்தை எனது வழக்குரையில் கூறப்படவில்லை என்றால் சரிதான்.

2. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் தபசில் சொத்துக்களின் பழைய ஜமீன் அடங்கல் நம்பர் மற்றும் தற்போதைய சர்வே எண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தபசில் சொத்துக்கள் ஆதியில் முத்துலட்சுமிஅம்மாளுக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தபசில் சொத்துக்கள் முத்துலட்சுமிஅம்மாளுக்கு சுயார்ஜிதமாக

பாத்தியப்பட்டதை காண்பிக்கும் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளனோ என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் தபசில் சொத்துக்கள் முத்துலட்சுமிஅம்மாளுக்கு 07.08.1973 தேதியிட்ட நன்கொடை பத்திரத்தின்படி பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நன்கொடை பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. தபசில் சொத்துக்கள் பொறுத்து நான் மைனராக இருந்தபோது எனது தந்தை என் பெயரில் வாங்கியதால் கிரையம் பெற்ற சமயத்தில் தபசில் சொத்துக்களுக்கான முன்பாத்தியஸ்தர் ஆவணங்களை அவர் பெற்றாரா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. தபசில் சொத்துக்கள் பொறுத்து கிரையம் எனது தந்தையால் எனது பெயரிலும், எனது சகோதரர் மாரிச்சாமி பெயரிலும் பெறப்பட்டது என்றால் சரிதான். தபசில் சொத்துக்களை நானும், எனது சகோதரர் மாரிச்சாமியும் கூட்டாக அனுபவம் செய்ததற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கூட்டுப்பட்டா தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கூட்டுப்பட்டா அனுபவத்தில் தபசில் சொத்துக்களுக்காக பெறப்பட்ட தீர்வை ரசீதுகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தபசில் சொத்துக்கள் விவசாய நிலங்கள் என்றால் சரிதான். அவற்றிற்கு கிணற்றுப்பாசனத்தின் மூலம் தண்ணீர் அளிக்கப்படுகிறது. தபசில் சொத்துக்கள் பொறுத்து நானும், எனது சகோதரரும் கூட்டாக பயிர் செய்து அனுபவம் செய்ததற்கு பயிர் அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தபசில் சொத்தில் வளர்க்கப்பட்ட பயிர்களுக்கான காப்பீடு பெற்றேனா என்றால் பெற்றேன். மேற்படி பயிர்களுக்கான காப்பீடு ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. எனது தந்தை அகத்தியாண்டிகோனார் எபபோது இறந்தார் என்றால் சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துபோனார். எங்களது குடும்ப சொத்துக்கள் பொறுத்து நானும், எனது சகோதரரும் பாகப்பிரிவினை செய்துகொண்டோமா

என்றால் பாகப்பிரிவினை செய்துகொள்ளவில்லை. ஆனால் மேற்படி சொத்துக்கள் பொறுத்து கிரையம் பெற்றுக்கொண்டோம். தாவா சொத்தை தவிரத்து பிற குடும்ப சொத்துக்களுக்கு நாங்கள் இருவரும் கிரையம் பெற்றுக் கொண்டோம். தாவா சொத்தை பொறுத்து நானும், எனதுசகோதரரும் கைத்தடி பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக்கொண்டோம். மேற்படி கைத்தடி பாகப்பிரிவினை ஆவணம் 1997ம் வருடம் ஏற்படுத்தப்பட்டது. 1997ம் வருடம்தான் நானும், எனதுசகோதரரும் தாவா சொத்தை தவிர்த்துள்ள பிற குடும்ப சொத்துக்களுக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி கிரையமும் பாகப்பிரிவினையும் ஒரே நாளில் நடந்ததா என்றால் இல்லை. கிரையம் பெற்று சில தினங்களுக்கு பிறகு பாகப்பிரிவினை செய்யப்பட்டது. நான் கூறியதுபோல் தாவா சொத்து பொறுத்து பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்றாலும், இவ்வழக்கிற்காக கைத்தடி பாகப்பிரிவினை ஆவணத்தை பொய்யாக உற்பத்தி செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து பொறுத்த கைத்தடி பாகப்பிரிவினை ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் அது இவ்வழக்கிற்காக பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

5. சர்வே எண்.376/2 இடத்தின் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 30 சென்ட் ஆகும். கைத்தடி பாகப்பிரிவினை ஆவணத்தின்படி வழக்குரை 2 தபசில் சொத்துக்களிலும் மேல்பாதி எனது சகோதரருக்கும், கீழ்பாதி எனக்கும் பிரிக்கப்பட்டது. மேற்படி கைத்தடி பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தப்பட்டதற்கு சாட்சிகள் யாரேனும் உள்ளனரா என்றால் 2 சாட்சிகள் இருந்தனர். அவர்கள் சுப்பையாகோனார் மகன் வேலுச்சாமி மற்றும் மருதப்பகோனார் மகன் சுப்பிரமணி ஆவார். நான் கூறியதுபோல் பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்றாலும், கைத்தடி பாகப்பிரிவினை ஆவணம் இவ்வழக்கிற்காக பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கிற்கு எனது சகோதரர் மாரிச்சாமியும் அவசிய கட்சி என்றால் சரியல்ல.

ஏனெனில் வழக்குரை 2 தபசில் சொத்துக்களில் கீழ்பகுதி பொறுத்து எனது சகோதரருக்கு எந்த உரிமையும் இல்லை. தாவா சொத்திற்கு பட்டா என் பெயரிலும், எனது சகோதரர் பெயரிலும் கூட்டாக ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. பிரதிவாதி 1996ம் வருடம் தபசில் சொத்துக்களுக்கு வடக்குபக்கத்தில் உள்ள சொத்தை கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பிரதிவாதி தபசில் சொத்திற்கு வடபுறம் உள்ள சர்வே எண்.376/1சி யை அனுபவம் செய்து 2005ம் வருடம் வீடு கட்டினார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது வழக்குரையில் மேற்படி வீட்டை கட்டும்போது தபசில் சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து கிழமேலாக 13.8 அடியும், தென்வடலாக 3 அடியும் பிரதிவாதி கட்டுமானம் கட்டிவிட்டார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். 2005ம் வருடம் பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக கூறப்பட்டு அதற்கான வழக்கறிஞர் அறிவிப்பை 2017ம் வருடம்தான் அனுப்பினேன் என்றால் சரியல்ல. மேற்படிவீடு பிரதிவாதியால் 2005ம் வருடம் கட்டப்பட்டது. ஆனால் எனது வழக்குரையில் கூறியுள்ள ஆக்கிரமிப்பு 2017ம் வருடம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்டது.

7. பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் மேல்புறத்தில் 1996ம் வருடம் வீடு கட்டினார் என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு கீழ்புறத்தில் வானம் தோண்டி காம்பவுண்ட் கட்ட 2017ம் வருடம் முயற்சித்தார் என்றால் 2017ம் வருடம் அந்த காம்பவுண்டை கட்டிவிட்டார். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 புகைப்படத்தில் ரோஸ் கலரில் உள்ள வீடுதான் பிரதிவாதியால் அவரது இடத்தில் மேல்புறத்தில் கட்டப்பட்ட வீடு என்றால் சரிதான். மேற்படி புகைப்படத்தில் காட்டப்பட்டிருந்த ரோஸ் கலர் வீட்டிற்கு கீழ்புறத்தில் உள்ள காம்பவுண்ட் சுவர்தான் 2017ம் வருடம் கட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதி வீட்டின் பின்புற சுவரும், காம்பவுண்ட் சுவரும் ஒரே நேர்க்கோட்டில்தான் உள்ளன என்றால் சரிதான். பிரதிவாதி வீட்டிற்கு

மேல்புறத்தில் ஒரு வீடு உள்ளது. அந்த வீடு ராமமூர்த்தி என்பவருக்கு சொந்தமானது. தற்போது அந்த வீடு வேறொரு நபருக்கு விற்கப்பட்டது. வாசா.ஆ.9 புகைப்படமானது 29.04.2025 தேதியில்தான் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 புகைப்படத்தில் பிரதிவாதி வீட்டிற்கு கீழ்புறம் உள்ள நீல நிற வீடு துரைப்பாண்டி என்பவருடையது என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டின் தென்புற கிழமேல் சுவர், அவரால் கட்டப்பட்ட காம்பவுண்ட் சுவர் மற்றும் அதன் கீழ்புறம் உள்ள துரைப்பாண்டி வீட்டின் தென்புற கிழமேல் சுவர் மற்றும் பிரதிவாதி வீட்டின் மேல்புறம் உள்ள ராமமூர்த்தி வீட்டின் தென்புற கிழமேல் சுவர் ஆகியவை ஒரே நேர்க்கோட்டில்தான் உள்ளன என்றால் சரிதான்.

8. எனக்கு பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே எண்.376/2 என்றால் சரிதான். பிரதிவாதி, ராமமூர்த்தி மற்றும் துரைப்பாண்டி ஆகியோர்கள் வீட்டிற்கு தென்புறம் உள்ள சொத்து எனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.376/2 புல எண்ணில் அமையப்ட்டட சொத்து என்றால் சரிதான். மேற்படியார்களை தவிர்த்து சர்வே எண்.376/2 புல எண்ணில் உள்ள எனது சொத்திற்கு வடக்குபுறத்தில் வேறு யாருடைய வீடு அமையப்பெற்றுள்ளது என்றால் தங்கராஜ் என்பவருடைய வீடு உள்ளது.

9. 26.06.1996 தேதியில் வேலுச்சாமி என்பவரிடமிருந்து பிரதிவாதி பெற்ற கிரைய ஆவணத்தின் சார்பதிவக நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் ெய்துள்ளேன் என்றாலும், அது வா.சா.ஆ 2 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றாலும் சரிதான். பிரதிவாதியின் சொந்த ஊர் சொக்கநாச்சியாபுரம் என்றாலும், அவரது சொந்தஊர் சீவலராயனேந்தல் இல்லை என்றாலும் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் வீடை தவிர்த்து சீவலராயனேந்தல் கிராமத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட வேறு சொத்துக்கள் குறித்த விபரம் எனக்கு தெரியாது. 2005 ம் வருடம் பிரதிவாதியால் கட்டப்பட்ட வீட்டிற்கு 2017 ம் வருடம் காலதாமதமாக நடவடிக்கை எடுத்ததற்கான காரணம் என்னவென்றால் 2005 ம் வருடம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியது

தொடர்பாக ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. மேற்படி பேச்சுவார்த்தையில் ஆக்கிரமிப்பு செய்த இடத்திற்கு ஈடாக பிரதிவாதியின் கீழ்புறம் உள்ள இடத்தை தருவதாக பிரதிவாதியால் கூறப்பட்டதால் எந்த நடவடிக்கையும் அதன்பிறகு எடுக்கப்படவில்லை. ஆனால் 2017ம் வருடம் பிரதிவாதியால் கீழ்புறத்தில் காம்பவுண்ட் சுவர் எழுப்பபட்டதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 2005ம் வருடம் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் நடத்தப்பட்டதாக சொல்லப்படும் பேச்சுவார்த்தை குறித்து எனது வழக்குரையில் நான் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. ஆனால் பிரதிவாதி 1ம் தபசில் சொத்தில் ஆக்கிரமிப்பு செய்ததற்கு பதிலாக வேறொரு இடத்தை எழுதிக்கொடுப்பதாக சொல்லி காலம் கடத்திவந்தார் என்று கூறியுள்ளேன். 1996ம் வருடம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வடபகுதியில் வீடு கட்டியதாகவும், அதனை தொடர்ந்து 2005ம் வருடம் தென்புறத்தில் எனது இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துகட்டுமானம் கட்டியதாகவும் எனது வழக்குரையில் தெரிவித்துள்ளேனா என்றால் கூறவில்லை. 2005ம் வருடம் எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியதாகதான் கூறியுள்ளேன். பிரதிவாதி 1ம் தபசில்சொத்தில் ஆக்கிரமிப்பு செய்ததாக கூறுவில்லை என்றாலும், ஆக்கிரமிப்பு செய்த இடத்திற்கு பதிலாக அவர் வேறொரு இடத்தை எழுதிக்கொடுப்பதாக கூறவில்லை என்றாலும் சரியல்ல.

10. எனது இடத்திற்கு வடக்கில் உள்ள வீடுகளுக்கு வடக்கில் கிழமேல் சாலை செல்கிறது என்றால் சரிதான். மேற்படி கிழமேல் சாலைக்கு செல்வதற்கு எனது இடத்திலிருந்து பாதை இல்லை என்றால் சரியல்ல. பாதை உள்ளது. சர்வே எண்.376/2ல் 2 எடுப்பில் கீழ்பாதியில் மேற்படி பாதை உள்ளது என்றால் சரிதான். எனது இடத்தில் மேற்படி பாதை எதுவும் இல்லை என்றாலும், பிரதிவாதியின் இடத்தின் வழியாக செல்வதற்கு பிரதிவாதி கிரையம் பெற்ற நாளிலிருந்து அவரை நான் இடையூறு செய்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதியின் வீட்டிற்கு வடக்கில் உள்ள சாலைக்கும், அவரது வீட்டிற்கும்

இடையில் ஒரு வாறுகால் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாறுகாலை நான்தான் JCB மூலம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. எனது இடத்தில் உள்ள மழைநீரை கடத்துவதற்கு மேற்படி வாறுகாலை ஏற்படுத்தினேன் என்றாலும், மேற்படி வாறுகால் அமைப்பதற்கு பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது என்றாலும்சரியல்ல.

11. 1ம் தபசில் சொத்தின் வடபுறத்தில் பிரதிவாதி வீட்டை தவிர்த்து வேறு நபர்களின் வீடும் காலிமனையும் உள்ளது என்றால் சரிதான். எனது வழக்குரையில் 1ம் தபசில் சொத்தின் வடக்குமாலாக மருதப்பன் வீடை தவிர்த்து வேறு நபர்களின் வீட்டை காட்டவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரையில் 1ம் தபசில் சொத்தின் தெற்குபுற மாலாக எனது தாத்தா அகத்தியாண்டிகோனார் புஞ்சை காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. எனது வழக்குரையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக சொல்லப்படும் 2ம் தபசில் சொத்தின் விஸ்தீரணம் 37.2 சதுரடி என்று குறிப்பிட்டுவிட்டு எனது வழக்குரை பாரா 5ல் பிரதிவாதி தபசில் சொத்தில் கிழமேலாக 13.8 அடியும், தென்வடலாக 3 அடியும் (மொத்தம் 41 சதுரடி)ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக மாற்றிக்கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்தின் மேற்குமாலாக பிரதிவாதி வீட்டை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மேற்குமாலாக காட்டப்பட்ட பிரதிவாதி வீடு பிரதிவாதியால் வாங்கப்பட்ட இடத்தில் மேல்புறத்தில் கட்டப்பட்ட வீடுதான் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டதாக சொல்லப்படும் வீட்டின் பகுதியை பொறுத்து பரிகாரம்கோரவில்லை என்றாலும், பிரதிவாதியால் கட்டப்பட்ட காம்பவுண்ட் சுவர் பொறுத்துமட்டும்தான் பரிகாரம் கோரியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

13. 2017ம் வருடம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிவிட்டு 2019ம் வருடம் காலதாமதமாக இவ்வழக்கை தாக்கல் செய்ததற்கான காரணம் என்னவென்றால் இடைப்பட்ட காலத்தில் பிரதிவாதியுடன் பேச்சுவார்த்தை நடத்திக்

கொண்டிருந்தேன். 2017ம் வருடத்திற்கு முன்பு காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டுவிட்டது என்றாலும், அதை மறைப்பதற்காக இவ்வழக்கை காலதாமதமாக தாக்கல் செய்தேன் என்றாலும் சரியல்ல. தபசில் சொத்துக்களை நீதிமன்ற் ஆணையர் பார்வையிட வரும்போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்ற ஆணையர் அறிக்கை தபசில் சொத்து பொறுத்து தெளிவாக ஏற்படுத்தப்பட்டது என்றாலும், இவ்வழக்கிற்காக தேவையற்ற ஆட்சேபனைகளை தாக்கல் செய்தேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.3ல் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் பகுதி சர்வே எண்.376/1சி ல் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் அது தவறாக காட்டப்பட்டுள்ளது. தபசில்சொத்துக்களை மீண்டும் சரிவர அளவீடு செய்ய வேறொரு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கோரி நடவடிக்கை ஏதேனும் மேற்கொண்டோமா என்றால் இல்லை. எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் பிரதிவாதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும், பிரதிவாதியின் மேல் வன்மத்தின் காரணமாக இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 2017ம் வருடம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டபிறகு நான் பிரதிவாதியிடம் அது குறித்து எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளமாட்டேன் என்று கூறியதால்தான் அவர் பதில் அறிவிப்பு வழங்கவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் பிரதிவாதி மட்டும் ஆக்கிரமிப்பு செய்துள்ளாரா என்றால் வேறு நபர்களும் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். மேற்படி ஆக்கிரமிப்பு செய்த வேறு நபர்கள் மீது நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாததற்கு காரணம் என்னவென்றால் மேற்படி நபர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு சமாதானமாக சென்றுவிட்டேன். அதனால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. மேற்படி நபர்களுடன் சமாதானமாக நான் செல்லவில்லை என்றாலும், இவ்வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன்

என்றாலும் சரியல்ல. பிரதிவாதியோ, எனது இடத்திற்கு அருகில் உள்ள மற்ற நபர்களோ தபசில் சொத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும், இவ்வழக்கை பொய்யாக தாக்கல செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும், இவ்வழக்கு பிரதிவாதி செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**